# ''''''''கிராம ராஜ்யம்'''' போய் '''''''அராஜக ராஜ்யம்''''!

உள்ளாட்சி இடைத் தேர்தல் ஜனநாயக விரோதச் செயல்களின் பேரணியாகவே அ.தி.மு.க. ஆட்சியில் நடந்து முடிந்திருக்கிறது. அந்த அக்கிரமப் பேரணியில் மாநில தேர்தல் ஆணையமும், காவல்துறை அதிகாரிகளும் கைகோர்த்து அ.தி.மு.க. வுடன் நடந்து சென்றுள்ளார்கள் என்பது ஜனநாயகக் காற்றை சுவாசிக்க விரும்பும் ஒவ்வொரு குடிமகனையும் வேதனைப்பட வைத்துள்ளது. தேர்தல் ஜனநாயத்தின் குரல்வளையை ஈவு இரக்கமின்றி ''''''''கூட்டணி'''' வைத்து நெறித்திருக்கிறார்கள்.

ஆகஸ்ட் **6**–ஆம் தேதி மாநில தேர்தல் ஆணையம் உள்ளாட்சி இடைத் தேர்தல்களுக்கான அறிவிப்பினை வெளியிட்டது. அறிவிப்பு எண்:**1/2014.** அதில் தேர்தலுக்கு வேட்பு மனு வாங்கும் தேதி, வேட்பு மனுவை தாக்கல் செய்ய இறுதி நாள், தேர்தல் நடைபெறும் தேதி எல்லாம் இருந்தது. ஆனால் தேர்தல் வாக்குப் பதிவு என்றைக்கு நடக்கும் என்பதற்கான அறிவிப்பு அதில் இடம்பெறவில்லை. வாக்கு எண்ணிக்கை தேதி இல்லாமலேயே மாநில தேர்தல் ஆணையம் ஒரு தேர்தல் அறிவிப்பை வெளியிட்டது.

அந்த அறிவிப்பையும் அதே நாளில் ரத்து செய்தது. கோவை மாநகராட்சியில் வாக்காளர் பட்டியல் முழுமை பெறவில்லை என்று தகவல் வந்ததாகவும், அதனால் தேர்தல் ரத்து செய்யப்படுகிறது என்றும் அறிவித்தது. அதன் பிறகு **22** நாட்கள் மாநில தேர்தல் ஆணையம் அமைதியாக இருந்தது. ஆனால் தேர்தல் ரத்து செய்யப்பட்ட ஆறாவது நாள் பூனைக்குட்டி வெளியே வந்து விட்டது. கோடிக் கணக்கான ரூபாய் நிதி ஒதுக்கி மாநகராட்சிகள், நகராட்சிகளில் உள்ளாட்சி இடைத் தேர்தலை மனதில் வைத்து வழக்கம் போல் ''''''''அறிவிப்புகளை''''

வெளியிட்டார் முதலமைச்சர் ஜெயலலிதா. முதல் அறிவிப்பு ஆகஸ்ட் 12–ஆம் தேதி துவங்கி, கடைசியாக ஆகஸ்ட் 27–ஆம் தேதியுடன் மொத்தம் 3835 கோடியே 56 லட்சம் ரூபாய்க்கு பல திட்டங்களை அறிவித்தார். குறிப்பாக உள்ளாட்சித் தேர்தல் நடக்க வேண்டிய கோவை, தூத்துக்குடி, திருநெல்வேலி போன்ற மாநகராட்சிகளுக்கு முக்கியமாக நிதி ஒதுக்கீடு செய்தார். இதுவும் 110 நிதி ஒதுக்கீடு போல் வெறும் அறிவிப்புகள் என்பது தனிக்கதை!

முதலமைச்சர் ஜெயலலிதா ஆகஸ்ட் 27–ஆம் தேதியுடன் உள்ளாட்சி இடைத் தேர்தலுக்கான திட்டங்கள் அறிவிப்பதை நிறுத்திக் கொண்டார். அதன் பிறகு ஆகஸ்ட் 28–ஆம் தேதி உள்ளாட்சி இடைத் தேர்தலுக்கான அறிவிப்பை மாநில தேர்தல் ஆணையம் வெளியிட்டது. ஆனால் தேர்தல் தேதி முன்பே அறிவிக்கப்பட்ட அதே செப்டம்பர் 18–ஆம் தேதி! ஆனால் முதலில் முதல்வரின் அனுமதியின்றி தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டது. இப்போது மாநில தேர்தல் ஆணையம் முறைப்படி முதல்வரின் அனுமதி பெற்று தேர்தல் தேதியை அறிவித்தது. அவ்வளவு தான் வித்தியாசம்!

அ.தி.மு.க.வும், மாநில தேர்தல் ஆணையமும் இணைந்து நடத்திய தேர்தலில் தி.மு.க. உள்பட 7 கட்சிகள் புறக்கணித்தன. பாரதீய ஜனதாக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சிகளும் தேர்தலில் பங்கேற்றன. ஆனால் வேட்பு மனுத் தாக்கல் செய்ய விடாமல் மிரட்டல், வேட்பாளர் விரட்டியடிப்பு, வேட்பு மனு மிரட்டி வாபஸ், அதிகார துஷ்பிரயோகம், அராஜகம், அ.தி.மு.க.வினரே வாக்குப் பதிவு செய்து கொண்டது என்று அத்தனை ஜனநாயக படுகொலைகளுக்கும் மாநில தேர்தல் ஆணையமும், காவல்துறையும் சாட்சியாக நின்று வேடிக்கை பார்த்தார்கள். ஜனநாயக முறையிலான தேர்தல் சவக்குழிக்கு அனுப்பப்பட்டதை சென்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் அ.தி.மு.க நடத்திக் காட்டியது. இந்த உள்ளாட்சி இடைத் தேர்தலிலும் அரங்கேற்றிக் காட்டியது.

மின்வெட்டு, சீரழிந்த சட்டம்– ஒழுங்கு, தேங்கிக் கிடக்கும் மக்கள் நடத்திட்டங்கள், தினந்தோறும் தெருவெல்லாம் நடக்கும் கொலை, கொள்ளைகள் என்று மக்கள் நல விரோதாக அ.தி.மு.க. ஆட்சி செயல்படுகிறது. அந்த மக்கள் விரோதச் செயலைக் கண்டித்து வாக்களிக்கும் சுதந்திரம் வாக்காளர்களுக்கு மாநில தேர்தல் ஆணையம் அளிக்கவில்லை. காவல்துறையும் கொடுக்கவில்லை. அதனால் அ.தி.மு.க.வினரே வேட்பாளர்களை அறிவித்து, அவர்களே வாக்குகளைப் போட்டு, அவர்களே வெற்றியை அறிவித்துக் கொண்ட தேர்தலாகவே இந்த உள்ளாட்சித் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது.

மாநில தேர்தல் ஆணையம் அ.தி.மு.க.வின் ஊதுகுழலாக மாறி விட்டது. காவல்துறை அ.தி.மு.க.வினருக்கு கைகட்டி வேலை பார்க்கும் ஏவல் துறையாகி விட்டது. ''''''''கிராம ராஜ்யம்'''' என்பதை வலுப்படுத்த நடைபெறும் உள்ளாட்சித் தேர்தலில் அ.தி.மு.க.வின் ''''''''அராஜக ராஜ்யம்'''' மட்டுமே கண்ணுக்குத் தெரிந்திருக்கிறது. மொத்தத்தில் ''''''''தேர்தல் ஜனநாயகம்'''' தமிழகத்தில் செத்து விட்டது.